கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாண சபை
2020.11.02

சுற்றுநிருபம் - 03/2020

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கட்கும்,

## தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியலும் அவற்றிற்கான சிறப்பு ஏற்பாடுகளும்

வடக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுச்சங்கங்கள் அவற்றின் நிதி மற்றும் தொழிற்பாட்டிற்கேற்ப கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 02/2019 சுற்றறிக்கைக்கமைவாக தரப்படுத்தப்பட்டு வருகின்ற 2017 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டத்தின் பகுதி III ஆணையாளரின் அதிகாரங்கள்,"கூட்டுறவுச் சங்கங்களை தரப்படுத்துவதற்காகவும் அச்சங்கங்களின் ஊழியர்களின் தரத்தை மற்றும் வகுப்பை அத்துடன் ஒவ்வொரு தரத்திலான, மற்றும் தரத்தில் இருக்க வேண்டிய ஊழியர்களின் ஆளணி எண்ணிக்கையை நிர்ணயிப்பதுடன் சம்பள அளவுத்திட்டத்தினை பொருத்துதல் மற்றும் தேவைப்படும் என தான் கருதும் விதத்தில் காலத்துக்கு காலம் மாற்றும் அதிகாரம் ஆணையாளருக்கு இருக்க வேண்டும்." என்னும் பிரிவு மூலம் எனக்குரித்தான அதிகாரங்களுக்கமைவாக இதுவரை தரப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் மட்டும் வெளியிடப்படுகின்றது. (இணைப்பு – 1).

இது தொடர்பில் கவனிக்கவேண்டிய விடயங்கள்

1. தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதவியணிகள் தொடர்பில் தேவையேற்படுமாயின் இணைப்பு - 2 இற்கேற்ப பொருத்தமான பதவிகளை உருவாக்குவதற்கு/மாற்றியமைப்பதற்குரிய ஆளணி மீளாய்வுக்கு உதவி ஆணையாளரூடாக பதிவாளருக்கு விண்ணப்பிக்க முடியும். (பொருத்தமான ஆளணி இணைப்பு – 2)

2. ஆளணி மீளாய்வு அனுமதிக்கேற்ப, தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்கனவே இருக்கின்ற பணியாளர்களுக்கான புதிய ஆளணியின் பதவி நிர்ணய அங்கீகாரத்தை மீள கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2.1 இதன் போது ஏற்கனவே பதவி நிர்ணயம் பெற்ற பணியாளர்கள் பாதிக்கப்படாதவாறு பணியாளர்களை நிலைப்படுத்தல் வேண்டும். எனினும் புதிதாக பதவிகளுக்கு ஆளணியைநியமிக்கும் போது தரப்படுத்திய பின் பெறப்பட்ட ஆளணி அனுமதிக்கமையவே இதன் போது ஏற்கனவே பதவி நிர்ணயம் பெற்ற பணியாளர்கள் பாதிக்கப்படாதவாறு பணியாளர்களை நிலைப்படுத்தல் வேண்டும். எனினும் புதிதாக பதவிகளுக்கு ஆளணியைநியமிக்கும் போது தரப்படுத்திய பின் பெறப்பட்ட ஆளணி அனுமதிக்கமையவே நியமிக்கப்படல் வேண்டும்.

உதாரணம் :- ஒரு கூட்டுறவுச்சங்கத்தின் பொதுமுகாமையாளர் பதவி தரப்படுத்தப்பட முன் 07 வது சம்பளத்திட்டத்தில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடமிருந்து ஆளணி அனுமதி பெற்றிருப்பின், தரப்படுத்திய பின் அப்பதவி 09 வது சம்பளத்திட்டத்திற்கு மாற்றப்படுமாயின் ஏற்கனவே 07வது சம்பளத்திட்டத்தில்கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடமிருந்து பதவி நிர்ணய அங்கீகாரம் பெற்ற பொதுமுகாமையாளர் அதே சம்பளத்திட்டத்தில் இளைப்பாறும்வரை தொடர்ந்தும் கடமையாற்றுவதுடன்,புதிதாக பதவிகளுக்கு நியமிக்கும் போது புதிய ஆளணி அதாவது மீளாய்வின் 9வது சம்பளத்திட்ட பதவி அனுமதிக்கேற்பவே நியமிக்கப்பட வேண்டும். தரப்படுத்தலின் போது தர இறக்கமாகும் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இவ் ஏற்பாடு பொருத்தப்பாடுடையதாகும்.

2.2 கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பதவி நிர்ணய அங்கீகாரம் கிடைத்த பின்னர் பணியாளரது நியமனக் கடிதத்திற்கான பொருத்தப்பாடுடைய திருத்தத்தை இயக்குனர் சபை (நியமன அதிகாரி) வழங்க வேண்டும்.

3. தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய அறிவித்தல் வெளியிடப்படும் சங்கங்கள் இரு வருடங்களுக்கு அதே தரத்திலேயே இருத்தல் வேண்டும். அதன் பின்னரான மீளாய்வின் போதேதர மாற்றம் செய்யப்படும். ஆளணி மீளாய்வின் பின்னர்சங்கங்கள் இருக்கின்ற பணியாளரதுபெறுகின்ற சம்பளங்களைக் குறைக்காது உரிய பொருத்தமான புதிய சம்பளப் படிநிலையில் நிலைப்படுத்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

4. தரப்படுத்தலின் பின்னர் ஏற்படும் உள்ளக பதவி உயர்வுகள், சங்கங்களுக்கிடையிலான ஒ பதவி இடமாற்றங்கள், பிற சங்கங்களிலிருந்து வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் போன்றவற்றின் போது மீளாய்வு செய்யப்பட்ட ஆளணி மற்றும் பணியாளரின் தகைமைகள் தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

5. புதிதாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் தமது இயலளவைச் சுற்றறிக்கை 02/2019 இற்கமைவாக சான்றுகளுடன் குறிப்பிட்டு தமக்கான தரப்படுத்தல் விண்ணப்பத்தினை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் சிபார்சுடன் பதிவாளருக்கு சமர்ப்பிக்க முடியும்.

6. வருடாந்தம் ஒவ்வொரு தை மாதம் முதலாம் திகதியும் தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பட்டியல் பதிவாளரால் வெளியிடப்படும்.

7. தரப்படுத்தப்பட்ட சங்கங்கள் அதனால் விளையும் பலாபலன்களை அச்சங்கங்களின் பணியாளர்களுக்கு மாத்திரமன்றி அங்கத்தவர்களுக்கும் கிடைக்கச் செய்வதற்காக பின்வரும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

7.1 தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது அங்கத்தவர்களை இனங்கண்டு பங்குகளைப் பூரணப்படுத்தாதவர்கள் தொடர்பில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரது சுற்றறிக்கை 01/2009 க்கமைவாக நடவடிக்கையெடுப்பதுடன், மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர்கள்,அமரத்துவமடைந்த அங்கத்துவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு சங்கத்தின்மீதான அக்கறையுள்ள அங்கத்தவர் பட்டியலை தயாரித்தல் வேண்டும்.

7.2 தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்,1983 ம் ஆண்டின் 32ம் இலக்கமும், 1992ம் ஆண்டின் 11ம் இலக்கமும் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972ம் ஆண்டின் 5ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 43(2)(ஈ) பிரிவு மற்றும் கூட்டுறவுச் சங்க விதி 15 (iv) வது பிரிவு ஏற்பாடுகளுக்கமைய கூட்டுறவு சங்கங்கள் மீது அங்கத்தவர்களது அக்கறையை அதிகரிப்பதற்காகவும் உறுப்புரிமையை வலுப்படுத்துவதற்காகவும் பின்வரும் பட்டியலுக்கமைவான குறைந்தளவு பங்குகளையாவது ஒருவர் கொள்வனவு செய்ய ஊக்குவித்தல் வேண்டும். இவற்றுக்கான பங்கிலாப வீதத்தை பின்வருமாறு தீர்மானித்து வழங்கலாம்.

| இல | கூட்டுறவுச் சங்கத்தின் தரம் | அங்கத்தவர் ஒருவர் கொள்வனவு செய்யக்கூடிய ஆகக்குறைந்த பங்குகள் (தற்போதுள்ள ஒருபங்கு உள்ளடங்கலாக) | அங்கத்தவர்களுக்கு வழங்கக்கூடிய குறைந்த பட்ச பங்கிலாப வீதம்* |
|---|---|---|---|
| 01 | A | 20 | 8 % |
| 02 | B | 15 | 7.5 % |
| 03 | C | 10 | 7 % |
| 04 | D | 08 | 6.5 % |
| 05 | E | 06 | 6 % |
| 06 | F | 04 | 5.5 % |
| 07 | G | 02 | 5 % |

*ஒவ்வொரு தரத்திலுள்ள சங்கமும் உச்சமாக 10% வரை பொதுச்சபை அனுமதியுடன் பங்கிலாபம் வழங்கலாம்.

7.3 இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் பங்குகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட காலப்பகுதியிலிருந்து ஒவ்வொரு நிதியாண்டும் மேற்படி வீதத்துக்கமைய பங்கிலாபம் வழங்கலாம். இவ் ஏற்பாட்டுக்கமைய.(உதாரணமாக)A தரத்திலுள்ள ஓர் கூட்டுறவுச்சங்கத்தில் ஒரு அங்கத்தவர் ஆகக்குறைந்தது 20 பங்குகளை கொள்வனவு செய்யமுடியும் அவ்வாறே B தரத்திலுள்ள கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் ஒருவர் 15 பங்குகளைக் கொள்வனவு செய்ய முடியும். .புதிதாக அங்கத்தவர் சேர்க்கப்படும்போது C தரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கமாயின் குறைந்தது 10 பங்குகளை கொள்வனவு செய்யவேண்டும்.. அதாவது ஒரு பங்கு ரூபா 100.00 பெறுமதியைக் கொண்ட மேற்படி பட்டியலுக்கமைவான பங்குகளைக் கொண்டவர்களுக்கு பங்கிலாபம் வழங்கக்கூடிய ஏற்பாட்டை சங்கங்கள் பொதுச்சபையில் சமர்பித்து நடைமுறைப்படுத்துவது கூட்டுறவுச் சங்கங்கள் மீதான அங்கத்தவர் தொடர்பை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் .

2020 ஆம் வருடத்தின் சங்கங்களின் தரப்படுத்தல் பட்டியல் 01.01.2020 முதல் அமுலுக்கு வருவதுடன் இத்திகதிக்குப் பின்னர் தரப்படுத்தப்படும் சங்கங்கள் 01,01.2021 இல் திணைக்களம் வெளியிடும் பட்டியலிலேயே இடம் பெறுமாயினும், குறித்த சங்கங்களின் தரப்படுத்தல் விளைவு திகதிகள்,(அமுலாகும் திகதிகள்) மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களூடாக அவ்வப்போது அறியத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்குமாகாண சபை.

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

பிரதி -

1. செயலாளர், மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு, வடக்கு மாகாண சபை.
2. செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, வடக்கு மாகாண சபை.
3. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம் , கிளிநொச்சி,மன்னார், முல்லைத்தீவு,வவுனியா
4. பணிப்பாளர் - மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா

இணைப்பு – 01

## தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

## மாவட்டம் - யாழ்ப்பாணம்

| பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் | | | |
|---|---|---|---|
| இல | சங்கத்தின் பெயர் | தரம் | திகதி |
| 01 | சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 02 | யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 03 | கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 04 | சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 05 | தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 06 | மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 07 | சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 08 | அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 09 | காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 10 | கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 11 | அரியாலை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 12 | பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 13 | கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 14 | பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 15 | கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | C | 01.01.2020 |
| 16 | ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | C | 01.01.2020 |
| 17 | வேலணை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | C | 01.01.2020 |
| 18 | அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | D | 01.01.2020 |
| 19 | வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | E | 01.01.2 |

| ஏனையவகை கூட்டுறவுச் சங்கங்கள் | | | |
|---|---|---|---|
| இல | சங்கத்தின் பெயர் | தரம் | திகதி |
| 01 | யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 02 | யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |

| மாவட்ட கூட்டுறவுச் சபை | | | |
|---|---|---|---|
| இல | சங்கத்தின் பெயர் | தரம் | திகதி |
| 01 | யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை | B | 01.01.2020 |

## தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

### மாவட்டம் - முல்லைத்தீவு

| பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் | | | |
|---|---|---|---|
| இல | சங்கத்தின் பெயர் | தரம் | திகதி |
| 01 | புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 02 | முல்லை மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| [illegible] | முல்லை கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | A | 01.01.2020 |
| 04 | முல்லை வடக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 05 | விசுவமடு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 06 | ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | C | 01.01.2020 |
| 07 | முல்லை தெற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | C | 01.01.2020 |
| 08 | பாண்டியன்குளம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | C | 01.01.2020 |

## தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

### மாவட்டம் - மன்னார்

| பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் | | | |
|---|---|---|---|
| இல | சங்கத்தின் பெயர் | தரம் | திகதி |
| 01 | மன்னார் கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | D | 01.01.2020 |
| 02 | மன்னார் மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | D | 01.01.2020 |
| 03 | நானாட்டான் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | D | 01.01.2020 |
| 04 | அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | D | 01.01.2020 |

Department of Co-operative Development
Northern Province

## தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

## மாவட்டம் - கிளிநொச்சி

| பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் | | | |
|---|---|---|---|
| இல | சங்கத்தின் பெயர் | தரம் | திகதி |
| 01 | பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 02 | பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 03 | கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |

| மாவட்ட கூட்டுறவுச் சபை | | | |
|---|---|---|---|
| இல | சங்கத்தின் பெயர் | தரம் | திகதி |
| 01 | கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபை | B | 01.01.2020 |

## தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

## மாவட்டம் - வவுனியா

Department of Co-operative Development ✲ Northern Province ✲

| பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் | | | |
|---|---|---|---|
| இல | சங்கத்தின் பெயர் | தரம் | திகதி |
| 01 | நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | B | 01.01.2020 |
| 02 | வவுனியா பனை் தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | C | 01.01.2020 |
| 03 | புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | D | 01.01.2020 |

இணைப்பு - 2

## முகாமை நிலைப் பதவிகள்

| பதவிப் பெயர் | பதவி இல | சம்பளக் குறியீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | A | B | C | D | E | F | G |
| 1. பொதுமுகாமையாளர் | 101 | 1,2 | 3,4 | 5,6 | 7,8 | 9 | 10 | 11 |
| 2. பிரதி பொதுமகாமையாளர் | 102 | 3,4 | 5,6 | 7,8 | 9,10 | 11 | 11 | 11 |
| 3. நிதிமுகாமையாளர் | 103 | 3,4 | 5,6 | 7 | | | | |
| 4. கணக்காளர் | 104 | 3,4 | 5,6 | 7,8 | 9,10 | 11 | 12 | 12 |
| 5. உள்ளக கணக்காய்வாளர் | 105 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 6. வர்த்தகமுகாமையாளர் | 106 | 4,5 | 6,7 | 8,9 | 10 | 11 | 12 | 12 |
| 7. உற்பத்தி முகாமையாளர் | 107 | 4,5 | 6 | 7 | 8 | 9,10 | 11 | 12 |
| 8. உதவி உற்பத்தி முகாமையாளர் | 108 | 7,8 | 9 | 10 | 10 | 11 | 12 | 12 |
| 9. தொழிற்சாலை முகாமையாளர் | 109 | 7,8 | 9 | 10 | 11 | 12 | 12 | 12 |
| 10. உதவி தொழிற்சாலை முகாமையாளர் | 110 | 9,10 | 11 | 12 | 12 | 13 | 13 | 13 |
| 11. வங்கி சேவை முகாமையாளர் | 111 | 6,7 | 8 | 9 | 10 | 11 | 12 | 12 |
| 12. நிர்வாக முகாமையாளர் | 112 | 6,7 | 8 | 9 | 10 | 10 | 10 | 10 |
| 13. ஆளணி முகாமையாளர் | 113 | 7,8 | 9 | 10 | 11 | 12 | 12 | 12 |
| 14. செயலாளர் | 114 | 1,2. | 3,4 | 5,6 | 7,8 | 9,10 | 11 | 12 |
| 15. முகாமையாளர் | 115 | 8,9 | 10 | 10 | 11 | 11 | 12 | 13 |
| 16. போக்குவரத்து முகாமையாளர் | 116 | 7 | | | | | | |
| 17. அச்சக முகாமையாளர் | 117 | 7,8 | 9 | 10 | 10 | 11 | 11 | 12 |
| 18. சந்தைப்படுத்தல் முகாமையாளர் | 118 | 7,8 | 9 | 9 | 10 | 10 | 11 | 11 |
| 19. வைத்தியசாலை செயலாளர் | 120 | 7,8 | 9 | 9 | 10 | 10 | 11 | 11 |
| 20. அதிபர் | 121 | 3,4 | 5 | 5 | 5 | 6 | 6 | 6 |
| 21. விரிவுரையாளர் | 122 | 5 | 6 | 7 | 8 | - | - | - |
| 22. அங்கத்தவர் பயிற்சி உத்தியோகத்தர் | 123 | 5 | 6 | 7,8 | 9,10 | 11 | 12 | 13 |

# மேற்பார்வை நிலைப் பதவிகள்

| பதவிப் பெயர் | பதவி இல | சம்பளக் குறியீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | A | B | C | D | E | F | G |
| 1. களஞ்சியப் பொறுப்பாளர் | 202 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 2. போக்குவரத்து உத்தியோகத்தர் | 204 | 9 | 10 | 10 | 11 | 11 | 12 | 13 |
| 3. கிராமிய வங்கி முகாமையாளர் | 205 | 9 | 10 | 10 | 11 | 11 | 12 | 13 |
| 4. நிர்வாக உதவியாளர் | 206 | 9 | 10 | 11 | 11 | 12 | 12 | 12 |
| 5. கிளை மேற்பார்வையாளர் | 207 | 10 | 11 | 12 | 12 | 13 | 13 | 13 |
| 6. களஞ்சியம்/கிளை முகாமையாளர் | 208 | 10,11 | 11,12 | 12,13 | 13,14 | 14,15 | 15,16 | 16 |
| 7. வெளிக்கள உத்தியோகத்தர் | 209 | 10 | 11 | 12 | 12 | 13 | 13 | 13 |
| 8. வெளிக்கள உத்தியோகத்தர் (கிராமிய வங்கி) | 210 | 10 | 11 | 11,12 | 12,13 | 13 | 13 | 13 |
| 9. பாதுகாப்பு உத்தியோகத்தர் | 211 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 10. ஒப்புநோக்குநர் | 213 | 12 | 13 | 14 | 14 | 15 | 15 | 15 |
| 11. கணக்குப்பதிவாளர் | 215 | 9 | 10 | 11 | 12 | 12 | 13 | 13 |
| 12. வேலை மேற்பார்வையாளர் | 230 | 9 | 10 | 11 | 11 | 12 | 12 | 13 |
| கல்வித்தகைமை இல்லாதவை | | | | | | | | |
| 1. புள்ளிவிபர உத்தியோகத்தர் | 210 | 10 | 11 | 12 | 12 | 13 | 13 | 13 |
| 2. தாதித்தாயார் | 220 | 8 | 9 | 10 | 10 | 11 | 11 | 12 |
| 3. முகாரி | 231 | 10 | 11 | 12 | 12 | 13 | 13 | 13 |
| 4. துணிசாயமிடும்பகுதிப் பொறுப்பாளர் | 232 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| 5. துணி அச்சிடும் பொறுப்பாளர் | 233 | 11 | 11 | 11 | 11 | 11 | 11 | 11 |
| 6. துணிமெருகூட்டும் பகுதிப் பொறுப்பாளர் | 234 | 12 | 12 | 12 | 12 | 12 | 12 | 12 |
| 7. புடவை மத்திய நிலைய பொறுப்பாளர் | 235 | 13 | 14 | 15 | 15 | 16 | 16 | 16 |
| 8. தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் | 236 | 9 | 10 | 11 | 11 | 13 | 13 | 13 |
| 9. சூளையிடுபவர் | 237 | 12 | 13 | 14 | 14 | 16 | 16 | 16 |

# நிறைவேற்றாளர் நிலை

| பதவிப் பெயர் | பதவி இல | சம்பளக் குறியீடு A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கிராமிய வங்கி எழுதுநர் | 300 | 12 | 13 | 14 | 14 | 15 | 15,16 | 16 |
| 2. எழுதுநர் | 302 | 11,12 | 12,13 | 13,14 | 14,15 | 15,16 | 15,16 | 15,16 |
| 3. கணக்காய்வு எழுதுநர் | 303 | 11 | 12 | 12 | 13 | 13 | 13 | 13 |
| 4. காசாளர் | 306 | 10,11 | 12 | 13 | 14 | 15 | 16 | 16 |
| 5. விற்பனைப் பிரதிநிதி | 307 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 6. விற்பனை உதவியாளர் | 308 | 15 | 16 | 16 | 17 | 17 | 17 | 17 |
| 7. வரவேற்பு உத்தியோகத்தர் | 309 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 |
| 8. பதிவேட்டுக்காப்பாளர் | 310 | 14 | 15 | 15 | 16 | 16 | 16 | 16 |
| 9. சாரதி | 312 | 13 | 14 | 14 | 15 | 15 | 15 | 15 |
| 10. எரிபொருள் நிரப்புநர் | 313 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 |
| 11. லொறி சுத்திகரிப்பாளர் | 314 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 |
| 12. காவலாளி | 315 | 15 | 15 | 16 | 16 | 17 | 17 | 17 |
| 13. மொத்தவிற்பனை நிலைய களஞ்சிய தொழிலாளி | 316 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 |
| 14. அலுவலக சேவகர் | 317 | 15 | 15 | 16 | 16 | 17 | 17 | 17 |
| 15. தொழிலாளி | 318 | 17 | 17 | 17 | 17 | 17 | 17 | 17 |
| 16. புத்தகம் கட்டுநர் | 320 | 14 | 15 | 15 | 16 | 16 | 17 | 17 |
| 17. அச்சக வெட்டுநர் | 321 | 14 | 15 | 15 | 16 | 16 | 17 | 17 |
| 18. கணினிப்பக்க உருவாக்குநர் | 322 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 19. உற்பத்தி இணைப்பாளர் | 325 | 14 | 14 | 14 | 14 | 14 | 14 | 14 |
| 20. உற்பத்தி உதவியாளர் | 326 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 | 16 |
| 21. இயந்திர இயக்குநர் | 328 | 11 | 12 | 12 | 13 | 13 | 14 | 14 |
| கல்வித்தகைமை இல்லாதவை | | | | | | | | |
| 1. மருந்தாளர்/ அச்சுக்கோப்பாளர் | 319 | 9,10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 2. மருத்துவ ஆய்வுகூட உதவியாளர் | 320 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 3. மருந்து கலப்பவர் | 321 | 13 | 14 | 15 | 15 | 16 | 16 | 17 |
| 4. தாதிமார் | 322 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 5. கவனிப்பாளர் | 323 | 15 | 16 | 17 | 17 | 17 | 17 | 17 |
| 6. மருத்துவமாது | 324 | 13 | 14 | 14 | 15 | 15 | 15 | 15 |